பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 119 இதழ்: 02
29-01—1993
விலை ரூபா 3-50

30-1-1993

## இன்றைய திருச்சபை எதிர்நோக்கும் சவால்கள்

புதிது புதிதாகத் தோன்றும் கிறிஸ்தவ தீவிரவாதக் குழுக்கள், மதப் போதனைகளை விலக்கும் கல்வி, இஸ்லாமிய மதம் அகன்று பரவுதல் போன்ற முப்பெரும் அலைகளே ஆபிரிக்க திருச்சபை எதிர்நோக்கும் சவால்களாக உள்ளது என்றார் நைரோபியின் பேராயர். மற்ற எவரையும் புண்படுத்தாமல், புண்படுத்தி விடுவோமோ என்ற அச்சம் இல்லாமல் தங்கள் விசுவாசத்தைப் பறைசாற்ற வேண்டிய சடமை ஒவ்வொரு கத்தோலிக்கருக்கும் உண்டு என்றார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் தோன்றி தற்போது பணப் பலத்துடன் ஆபிரிக்காவிலும் மக்களைக் குழப்ப முயலும் சில அடிப்படைவாதக் கிறிஸ்தவக் குழுக்கள் குறித்தும் தமது கவலையை வெளியிட்டார் பேராயர்.

✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

### ★ இளவாலை-மாதகல் பகுதிக்குத் திருப்பயணம்

# தன் மந்தையைத் தேடிச்சென்ற நல்ல ஆயன்

**இராணுவப் பிடியிலுள்ள இளவாலை-மாதகல் பகுதிக்கு, அங்கு இன்னலுறும் மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, ஆசீரளிக்க, கடந்த 21ஆம் திகதி வியாழன் அன்று யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, பருத்தித்துறை கடல் மார்க்கமாக, சர்வதேச செஞ் சிலுவையினது உதவியுடன், 3 நாள் திருப்பயணம் மேற்கொண்டார்.**

ஆயருடன் மனித முன்னேற்ற இயக்குநர் அருட்திரு. M. இம்மானுவேல் பயஸ் அடிகளாரும், திருக்குடும்பக் கன்னியர் பதில் மாகாணத்தலைவி அருட்செல்வி M. யோலன்ட் அவர்களும் சென்றனர்.

கடந்த 6 மாதகாலமாக இரு குருக்கள், அருட்தந்தையர் J. A. யேசுதாஸ், G. பீற்றர் அவர்களும், பத்துக்கு மேற்பட்ட திருக்குடும்பக் கன்னியர்களும் இராணுவ பிடியில் அகப்பட்ட மக்களினதும் அநாதைச் சிறுவர்களினதும் துயர் துடைப்பு வேலைகளில் ஈடுபட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே!

அங்கு சென்று வந்த ஒருவரின் இதயக் குமுறல்களில் சில.

● 300க்கு மேற்பட்ட மக்கள் ஒருவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி இராணுவ மயமான பிரதேசத்தில் தம் காலத்தை கழிக்கின்றார்கள்.

● இளவாலை மாதகல் பகுதிகளில் அநேகமானோர் வயோதிபக் காலத்தை மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் செலவிட முடியாத துர்ப்பாக்கிய நிலையில் வாழ்கிறார்கள்.

● அரிசி, சீனி, பருப்பு தவிர வேறு உடல் ஆரோக்கியத்திற்கான உணவு ஒன்றுமில்லை. உயிரோடு நடமாடும் பிணங்களாக காட்சியளிக்கின்றார்கள்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## அருட்கலாநிதி அன்ரன் மத்தாயஸ் எழுதிய நூல் வெளியீட்டு விழா

அருட்கலாநிதி அன்ரன் மத்தாயஸ் எழுதிய, **"The Catholic Church in Jaffna 1875 — 1925"** with special reference to the ministry of Fr. S. Gnanapragasar– எனும் நூல் கடந்த வியாழன் 21-01-1993 அன்று, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத் தலைவர் S. F. சேவியர் தலைமையில் நடந்த வைபவத்தில், தென்னிந்திய திருச்சபையின் புதிய ஆயராக நியமனம் பெறவுள்ள கலாநிதி S. ஜெபநேசன் அடிகளாரால் ஆசியுரை வழங்கி வெளியிடப்பட்டது. இதன் முதல் பிரதிகளை முன்னாள் குருமுதல்வர் S. A. மைக்கல் சாமி o.m.i., முன்னாள் புனித. பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் A. S. அகஸ்தீன், யாழ். ஜெயம் விக்ரர், திரு. K. ராசரட்ணம் முதலியோர் பெற்றுக்கொண்டனர்.

இவ்விழாவில் வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக பதில் துணை வேந்தர் பேராசிரியர் S. மகேஸ்வரன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் P. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் நூல் ஆசிரியரின் சிறப்பு மிகு ஆற்றல், திறமைகளை எடுத்துரைத்து, ஆங்கிலத்தில் எழுதிய இவ்வரலாற்று நூல் சர்வதேச ரீதியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றுப் பயனளிக்கும் எனும் நம்பிக்கையைத் தெரிவித்தனர்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## பெப்ருவரி 11★முதலாவது உலக நோயாளர் தினம்

### யாழ் வைத்தியசாலை ஆன்ம குருவின் செய்தி



திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் லூர்து அன்னையின் திருநாளாகிய பெப்ரவரி 11ம் திகதியை அகில உலக நோயாளர் தினமாகப் பிரகடனம் செய்துள்ளார்.

இந்த ஆண்டு அகிலமெங்கும் கிறிஸ்தவர்களால் முதன் முறையாகக் கொண்டாடப்படும் இத்தினம் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அதே தினத்தில் கொண்டாடப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

திருத்தந்தை இத்தினத்திற்கென அளித்த ஆசிச் செய்தியிலே துன்பம், நோய் என்ற, இம் மாபெரும் மறைபொருள் முன் ஆழ்ந்த செவிமடுப்பு, தியானம், ஆழ்ந்த அர்ப்பணம் போன்ற மனப்பாங்குகளை வளர்க்க எங்களை அழைக்கின்றார். அதேவேளையில் சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கு பல்வேறு வகைகளில் துன்புறுகின்றவர்கள் மீது விசேட கவனம் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் தமது ஆசிச்செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## யாழ் பேராலயப் பங்கு மாணவனுக்குப் பாராட்டு விழா

யாழ் பேராலயப் பங்கைச் சேர்ந்த ஞா. யூட் கிறேசியன் எனும் கத்தோலிக்கமாணவன், 1992 ஆகஸ்ட். மாதம் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில், 4 பாடங்களிலும் அதிவிசேட திறமைச் சித்தி(A) பெற்றமைக்காக, பேராலய இளைஞர் உருவாக்க இயக்கம் ஒரு பாராட்டு விழாவை, வரும் ஞாயிறு 31-01-93 அன்று, பங்குத் தந்தை S. H. ஜெபநேசன் அடிகளாரின் ஆசீருடன் ஒழுங்கு செய்துள்ளது.

### ★ மரியாயின் சேனையின் ஆண்டுவிழா

## பங்குக்குருவுடன் இணைந்து செயல்படுங்கள் — யாழ் ஆயர்

## சேனையை இளமைப்படுத்துங்கள் — குருமுதல்வர்

கடந்த ஞாயிறு 17-01-93 அன்று யாழ் மறை வட்டத்தை சார்ந்த சகல மரியாயின் சேனையின் 'பிரசீடியங்கள்' மறைக்கல்வி நடுநிலையத்தில் ஒன்றுகூடி கொண்டாடிய ஆண்டு விழாவில் கலந்து கொண்டு திருப்பலியாற்றிய யாழ். ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, பொதுநிலையினரின் பொற்காலமாகிய இக்காலத்தில் இறையரசில் பணிபுரிய தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியராகிய சேனையாளரின் சிறப்பான அழைப்பை நினைவுபடுத்தி, அவர்கள் தத்தமது பங்குத்தந்தையருடன் ஒருங்கிணைந்து செயல்படவேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

யாழ். கொமிற்சியத் தலைவர், சகோ. தார்சீசியஸ் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், மறைவட்ட குருமுதல்வர் அருள்திரு S. J. இம்மானுவேல் அடிகளார் சிறப்பு விருந்தினராய் உரையாற்றுகையில், உய்விக்கும், திசைகாட்டும் சக்தியைக் கொண்டுள்ள ஆன்ம வழிகாட்டிகளாயிருக்கும் பங்குத் தந்தையர் தங்கள் பல்வேறு பணியின் பழுவைப் பொருட்படுத்தாது, பிரசீடிய கூட்டங்களில் பிரசன்னமாயிருக்கும் அவசியத்தையும், பொறுப்பை

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

### ★ தென்னிலங்கையில் தீக்கிரையான

## ஆலயம் அமைக்க அனுமதிமறுப்பு

தென் இலங்கையில் 'வாலானாகோதா'கிராமத்தில் கத்தோலிக்கர் ஜெபம் செய்வதற்காகப் பயன்படுத்தி வந்த குடிசை ஒன்று இனந்தெரியாத வன்முறை கும்பலால் தீக்கிரையாக்கப்பட்டது. அக்கிராம மக்களின் கத்தோலிக்க ஆலயமாகவும் பெண்களின் சமூகப்பணி மையமாகவும் இருந்த அக்குடிசையை மீண்டும் கட்டுவதற்கு காவற்துறை தடைவிதித்துள்ளது. நியாயமான விலையில் ஒரு கத்தோலிக்கரால் தரப்பட்ட அவ்விடத்தில் ஆலயம் கட்டுவதற்கான அனுமதியும் மறுக்கப்பட்ட அவ்வேளை இத்றகான காரணங்களும் கொடுக்கப்படவில்லை. மாறாக அவ்விடத்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## உரையாடலுக்கு நம்பிக்கை, திறந்தமனம், நேர்மை தேவை

கிறிஸ்தவ சபைகளுக்கிடையே ஒன்றிப்பிற்கான உரையாடலுக்கு நம்பிக்கை, திறந்தமனம், நேர்மை தேவைப்படுகிறது என்று கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடலில் ஈடுபட்டுள்ள கத்தோலிக்க குருக்கள் கருத்துத் தெரிவித்தனர். அகில திருச்சபைக்கான புதிய மறைக்கல்வி ஏடு, உரையாடலுக்குத் தேவையான விசுவாசம் பற்றிய தெளிவான விளக்கம் கொண்டிருப்பதால் கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடலுக்கு இப்புதிய ஏடு உதவியாக இருக்கும் என்று கிறிஸ்தவ ஒன்றிப்புப் குழுவின் குரு மக்ஸ் தூரியின் கூறினார்.

ஒருவர் மற்றவரின் கொடைகளைப் பெறுவதற்கு அன்பு, சகோதரத்துவம், ஈர்ப்பு, திறந்த மனம் ஆகியன தேவை என்று இத்தாலிய ஆயர் செர்யோ கொரஸ்ரி கூறினார். ஒவ்வொர் ஆண்டும் ஜனவரி 18 முதல் 25 வரை கிறிஸ்தவ

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

### புனித பத்திரிசியார் கல்லூரி

## மாணவன் முதலிடம்

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் யாழ் கல்வித் திணைக்களத்தின் அநுசரணையுடன், 1992 நவம்பரில் முதல் தடவையாக நடாத்தப்பட்ட கல்வி பொதுத்தராதரப் பரீட்சையில், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த யூட் ரிறோன் என்னும் மாணவன், சகல பாடமொத்தப் புள்ளி அடிப்படையில், 717 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தை வகுக்கிறாரென பேரவையின் தேர்வுக்குழு தெரிவித்திருக்கிறது.

## எம்கருத்து

# ஒற்றுமைக்காக உழைப்போம்

மனுவுருவான இறைவனின் திருச்சபை இராயப்பரைத் தலைமை மையமாகக் கொண்டு ஒற்றுமையுடன் செயல்பட வேண்டுமென்றுதான் இயேசு செபித்தார். ''தந்தாய், நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல், அவர்களும் நம்முள் ஒன்றாய்இருக்கும்படி மன்றாடுகிறேன்.'' (அரு.17-21)

காலப்போக்கிலே, கொள்கையடிப்படையிலும், வழிபாட்டு நடைமுறையிலும் கருத்துவேறுபாடுகள் தோன்றவே, திருச்சபையில் பிரிவினைகளும் பேதங்களும் தலைதூக்கின. 10ஆம் நூற்றாண்டிலே, மேற்கத்திய திருச்சபையின் வழிபாட்டு நெறிமுறைகள் பொருத்தமில்லையென்று, கீழைத்திருச்சபை உருவாகி உரோமை ஆயரின் தலைமையை உதறிவிட்டுப் பிரிவினைச் சபையை நிறுவியது. (Eastern Orthodox Church). 15ஆம் நூற்றாண்டில் திருச்சபை வாழ்வில் புகுந்த தகாத நடைமுறைகளே சீர்திருத்தம் என்ற மாபெரும் புரட்சியைத் தோற்றுவித்து, மேலும் பல்வேறு பிரிவினைச்சபைகளுக்கு வித்திட்டது (Protestant Churches).

கிறிஸ்தவச் சபைகளிடையே காணும் பிரிவுகளும் பிளவுகளும் சகிக்கமுடியாத துன்மாதிரிகைகளே!

மீண்டும் திருச்சபைகள் ஒன்றுபட்டு, ஒரு மேய்ப்பனும் ஒரே மந்தையுமாகத் துலங்க அனைவரும் செபிக்க வேண்டும் என்று தூண்டி, இதற்காக ஜனவரி 18 முதல் 25 வரை ''திருச்சபை ஒன்றிப்பு வாரம் (Church Unity Octave) என்பதைத் தொடங்கியவர் அபே குத்தூரியர் (Abbe Couturier) எனும் ஓர் அங்கிலிக்கன் குரவரே. அந்த முயற்சியைத் திருத்தந்தையரும் பெரிதும் பாராட்டி வரவேற்றனர்.

இந்த ஒன்றிப்பு முயற்சி 2ஆம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் பின் தீவிரம் அடைந்துள்ளது எல்லோரும் அறிந்ததே!

எனவே, கிறிஸ்தவ ஒற்றுமையை விரைவு படுத்த நாமும் நம்மால் இயன்ற அளவு செபித்தும், உழைத்தும் வரவேண்டும் என்பது தெளிவு. ஜனவரி 25ஆம் நாளோடு ''கிறிஸ்தவ ஒன்றிப்புவாரம்'' முடிந்தாலும், நாம் தொடர்ந்து செபத்தாலும் பல்வேறு நடவடிக்கைகளினாலும் பிரிந்த நம் சகோதரரோடு சுமுகமான உறவும், உரையாடலும் கொள்ளவேண்டும்.

இந்த உரையாடல்களில் அனைவருமே ஒருவர் ஒருவரைப் புரிந்துகொண்டு, ஒருவர் ஒருவருக்குக் கருத்துப் பரிமாறுதலால் உதவிக்கொண்டு, வளர்ச்சி காண்பதே முக்கியம். தாங்கள்தான் எல்லா உண்மைகளுக்கும் இருப்பிடம் எனும் இறுமாப்பு அடங்கவேண்டும். போட்டி மனப்பான்மைக்கு இங்கு இடம் இல்லை.

இந்த ஒன்றிப்பு நன்முயற்சி, தன் இறுதிக் குறிக்கோளை எய்தும்வரை நிற்காது, நிற்கலாகாது. கத்தோலிக்கர் இந்தப் பாதையில் முன்னேறிச்செல்ல தங்களால் ஆனவரை முயற்சியெடுக்கவேண்டும். அப்படி முயற்சி செய்வோரை முடக்கிவிடாமல், அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும்.

ஆனால், நாம் இதிலே மேலெழுந்த வாரியான போக்கு எதையும் மேற்கொள்ளலாகாது; ஒன்றிப்புக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய விவேகமற்ற ஆர்வம் கூடவே கூடாது.

பல்வேறு கிறிஸ்தவச் சபைகளும் பொதுவாக நற்கருணை வழிபாடு நடத்தவோ, பரஸ்பர நற்கருணைப் பந்தியில் அமரவோ முற்படலாகாது. இதற்கான காலம் இன்னும் வரவில்லை. மறைக்கோட்பாடுகள் பற்றிய வேறுபாடுகளைக் களைந்தெறியுமுன் இதற்கு இடமில்லை.

கிறிஸ்து ஆவலோடு விரும்பித்தேடிய ஒற்றுமை, திருச்சபைச் சமூகங்களுக்குள் ஒன்றிப்பு ஏற்படுவதற்கான முன் நிபந்தனை, தனிப்பட்ட முறையிலும், தனித் திருச்சபை மட்டத்திலும் நாம் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வதுதான். ஆகவே மறுமலர்ச்சி வழியாய் ஒற்றுமைக்கு வழிகோல, அதை விரிவாக்க, ஆழப்படுத்த நாம் தொடர்ந்து முயன்று கொண்டு வருவோமாக!

# புரியாத புதிர்களா?

அதிகாரம் 5

## புதிய ஏற்பாடு

**புதிய ஏற்பாட்டின் மேன்மை**

17. விசுவசிப்பவர்கள் அனைவருக்கும் நிறைவாழ்வளிக்கும் கடவுளின் வல்லமையான இறைவார்த்தை (காண் உரோ. 1:16) புதிய ஏற்பாட்டு நூல்களில் மிகவும் சிறப்பான முறையில் அடங்கியுள்ளது; தனது ஆற்றலையும் காண்பிக்கின்றது. ஏனெனில், காலம் நிறைவேறியபோது (காண் கலா. 4 : 4) வாக்கு ஆனவர் மனுவுருவானார்; அருளும் உண்மையும் நிறைந்து விளங்கி (காண் அரு. 1 : 14) நம்மிடையே குடிகொண்டார். கிறிஸ்து இறைவனின் அரசை இவ்வுலகில் ஏற்படுத்தினார்; தம் தந்தையையும் தம்மையும் சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தினார்; தமது இறப்பாலும் உயிர்ப்பாலும் மாட்சிநிறை விண்ணேற்றத்தாலும், தூய ஆவியை அனுப்பியதாலும் தமது அலுவலை நிறைவுசெய்தார். முடிவில்லா வாழ்வுதரும் வார்த்தைகளை (காண் அரு. 6 : 68) அவர் ஒருவரே கொண்டுள்ளார்; பூமியினின்று உயர்த்தப்பட்டு எல்லா மனிதரையும் தம்மிடம் ஈர்த்துக்கொள்கின்றார் (காண் அரு. 12 : 32). நற்செய்தியைப் போதிக்கவும் கிறிஸ்துவும் ஆண்டவருமான இயேசுவில் விசுவாசத்தைத் தூண்டவும் திருச்சபையை ஒன்று கூட்டவும் வேண்டி அவருடைய அப்போஸ்தலர்களுக்கும், இறைவாக்கினருக்கும் தூய ஆவியில் (காண் எபே. 3:46 கிரேக்க மூலம்) இம்மறைபொருள் இப்பொழுது வெளியாக்கப்பட்டது போல மற்ற தலைமுறைகளுக்கு வெளியாக்கப்படவில்லை. இவ்வுண்மைகளுக்குப் புதிய ஏற்பாட்டு நூல்கள் நிறைவான தெய்வீகச் சான்றாக நிலவுகின்றன.

**நற்செய்தி நூல்கள் அப்போஸ்தலர் காலத்தவை**

18. திருமறை நூல்கள் அனைத்திலும், புதிய ஏற்பாட்டிலுங்கூட, நற்செய்தி நூல்கள் சிறந்த ஓர் இடத்தை வகிக்கின்றன என்பதை அறியாதார் யாரும் இல்லை. மனுவுருவெடுத்தவார்த்தையான நமது மீட்பரின் வாழ்விற்கும் போதனைக்கும் அவையே முக்கிய சான்றுகளாக விளங்குகின்றன.

அடுத்த இதழில்
அதிகாரம் 6

நற்செய்தி நூல்கள் நான்கும் அப்போஸ்தலர்களிடமிருந்து தோன்றியவை என்பதைத் திருச்சபை என்றும் எங்கும் ஏற்றிருந்தது, ஏற்றும் வருகின்றது. ஏனெனில், கிறிஸ்துவின் கட்டளைப்படி அப்போஸ்தலர்கள் போதித்தவற்றைப் பின்னர் அவர்களும் அவர்கள் காலத்தவரும் இறை ஆவியின் ஏவுதலால் எழுத்து வடிவில் நமக்கு விட்டுச்சென்றனர். இவையே நமது விசுவாசத்தின் அடித்தளமான மத்தேயு, மாற்கு, லூக்காஸ், அருளப்பர் ஆகியோரின் நான்கு வடிவ நற்செய்தி நூல்களாகும்.

**நற்செய்தி நூல்களின் வரலாற்றுத் தன்மை**

19. நற்செய்தி நூல்கள் நான்கும் வரலாற்றுத் தன்மை கொண்டவை என்பதைத் திருச்சபைத் தாய் தயக்கமின்றிக் கூறுகின்றாள். இவை இறைமகனான இயேசு மானிடரிடையே வாழ்ந்தபோது, அவர் விண்ணேற்படைந்த நாள் வரை (காண் அப். 1 : 1-2) மக்களின் முடிவில்லா நிறைவாழ்விற்காக அவர் உண்மையிலேயே செய்தவற்றையும், போதித்தவற்றையும் அப்படியே நமக்குத் தருகின்றன என்று அவள் உறுதியாக என்றும் தொடர்ந்து ஏற்று வந்தாள், ஏற்றும் வருகின்றாள். அப்போஸ்தலர்களோ ஆண்டவர் கிறிஸ்துவின் விண்ணேற்றத்திற்குப் பின், அவர் தம் மாட்சிமிகு நிகழ்ச்சிகளால் கற்பிக்கப்பட்டு உண்மையின் ஆவியானவரின் ஒளியால் பயிற்றுவிக்கப்பட்டு, அவர் சொன்னவற்றையும் செய்தவற்றையும் தமக்குச் செவிசாய்த்தவர்களுக்கு நிறைவான அறிவுடன் கூறிச்சென்றனர். திரு ஆசிரியர்கள் வாய்மொழி வடிவிலோ எழுத்து வடிவிலோ வழிவழியாக வந்த பற்பல மரபுகளிலிருந்து சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, மற்றும் சிலவற்றைத் தொகுத்து, அல்லது தங்கள் சபைகளின் நிலைமைகளுக்குத் தக்கவிதத்தில் விரித்து, அதேசமயத்தில் அச்செய்தியின் அறிவிப்பு வடிவைக் காத்து, ஆனால் எப்பொழுதும் இயேசுவைப் பற்றியுள்ள உண்மையானவற்றையும் நேர்மையானவற்றையும் மட்டுமே அறிவிக்கும் வகையில் நான்கு நற்செய்தி நூல்களையும் எழுதினர். அவர் தம் வார்த்தைகளைப் பயின்றுள்ள நாம் அவற்றின் 'உண்மையை' அறிந்துகொள்ளும் நோக்குடன் அவர்கள் தம் சொந்த ஞாபகத்திலிருந்தும், நினைவிற்கு வந்தவற்றிலிருந்தும் அல்லது ''தொடக்கமுதல் கண்கூடாகக் கண்டவர்களும் தேவ வார்த்தையின் பணியாளர்களுமாய்'' இருந்தோரின் சான்றிலிருந்தும் அவற்றை எழுதினர் (காண் லூக். 1:2–4).

(வளரும்)

# அன்பின் ஆட்சியை நிறுவ அழைப்பு

யாழ். மறைவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்புக் கலந்துரையாடல் பேராயத்தின் இயக்குநர்
அருட்திரு. J. E. ஜெயசிலன்



இறைவார்த்தைப் பணியகம்
211, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்

கிறிஸ்து இயேசுவில் அன்புச் சகோதரங்களே!

கடந்தவாரம் கிறிஸ்தவ உலகு முழுவதும் ஒன்றிப்பு வாரமாக அனுசரிக்கப்பட்டு கொண்டாடப்பட்டது. இயேசுக்கிறிஸ்து தாமே தம் பெயரைத் தாங்கும் எல்லோரிடையேயும் நிலவ வேண்டுமென விரும்பியது போன்ற ஒருமைப்பாட்டைப் பற்றிச் சிந்திக்கவும், அதற்காகச் செபிக்கவும், அதை நோக்கி முழு மூச்சுடன் முயலவும் இவ்வாரத்தில் எம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. தமது திருப்பாடுகளுக்குட்புகும் தருவாயில், ''இவர்கள் எல்லோரும் ஒன்றாயிருப்பார்களாக'' (அரு. 17 : 21) என்ற ஆழ்ந்த உணர்ச்சியோடு அவர் செபித்தார்.

அந்தமில்லாத ஒரு போராகிய சிலுவையில் எம்மக்கள் அறையப்பட்டுத் தொங்கிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், எம்மிடையே பிளவுபட்டுக் குருதிபாய்ந்தவாறாக இருக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம், அமைதியை முன்னெடுக்கக் கூடிய வலுவுள்ள பயன்தரு கருவியாக எப்படிச் செயற்பட முடியும்?

எனவே சகல கிறிஸ்தவர்களும் ஒன்றுசேர்ந்து எம்முட் புதைந்திருக்கும் இறை அரசு சார்பான சக்திகளையும் அன்பு, மன்னிப்பு, உண்மை முதலிய மதிப்பீடுகளையும் வெளிக்கொணர்ந்து மலரவைக்க அழைக்கிறோம். எம் உள்ளங்களில் நாம் மறைவாகப் பேணிவளர்க்கும் வெறுப்பு, பழிவாங்கல், அறியாமை, சந்தேகம், போட்டிமனப்பான்மை ஆகிய தீய ஆவிக்குரிய சக்திகளை மனப்பூர்வமாகவும், உறுதியாகவும் அழிப்பதன் வழியாக அதைச் சாதிப்போம்.

இவ்வகை உண்மையான உள்ளரங்க புதுப்பித்தல் மூலமும் வேதனையுறும் எமதுசகல மக்களுடனும் ஒத்துணர்வோடு உதவ இணைவதாலுமே எமது ஒன்றிப்பு பொருத்தமானதும் பயனளிப்பதுமாகும். இத்தரமுடைய ஒன்றிப்பையும், அன்பின் ஆட்சியையுமே நாம் தேடுகிறோம். எம் கிறிஸ்தவ சகோதரர்களும் தேடவேண்டுமென அழைக்கிறோம்.

ஒப்பம்:

ஜே. ஈ. ஜெயசிலன் எஸ். ஐ. ஆனந்தராஜன் கென்றி விக்ரர்
பென் குணறெட்ணம் ஏ. சந்தியாப்பிள்ளை

# போர் முழக்கங்களின் மத்தியில் எம்மக்களின் ஆன்மீகநிலை

இன்று மனித உறவுகளுக்கும் மனிதாபிமான உணர்வுகளுக்கும், மறிப்புப் போடும் சமூக வரம்புகளால், பெருமூச்சோடு பொருமிக் கொண்டிருக்கும் எம் அச்சுநகர் மக்கள், அந்நியனின் ஆக்கிரமிப்புக்கு இரையாக அதிக தூரம் இல்லை. அல்லும், பகலும் அந்நியனின் ஆக்கிரமிப்புக்குப் பயந்து, ஆகாயத்தைப் பார்த்தவாறு அணுவணுவாய் நாள்தோறும் மடிந்து, அகப்படும்பொருட்களை கையில் சுமந்து அங்கலாய்த்து அலறும் ஒலி ஓர்புறம். விடிந்தால் ''பொம்மர்'' வருமோ என்ற ஏக்கம், பொழுது மடிந்தால் ''செல்'' வந்து தாக்குமோ என்ற தவிப்புநிலை, இரண்டுக்கும் இடைப்பட்ட நேரத்தில் தத்தமக்குரிய கடமைகளை செய்ய முடியாத தத்தளிப்பு. இவ்விதம் மனித உணர்வுகளை வளர்க்க முடியாது, சிந்திக்கும் சக்தி, செயலாற்றும் திறனை இழந்து நடமாடும் இயந்திரங்களாக மாறும்வேளை, எம் அன்பின் தந்தை தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையை அன்புக்கரம் நீட்டி ''அஞ்சாதே ஆண்டவன் உன்னோடு, தாய் உதரம் தோன்றுமுன்னே இறைவன் உன்னைத்தன் கரங்களிற் பொறித்து வைத்திருக்கின்றார்.'' என்ற ஆழமான விசுவாச வாக்குகளால் அடியவர்களின் உள்ளங்களை அமைதிப்படுத்தி அரவணைக்கின்றார். அத்துடன் இவரது பெரும் பொறுமை, சேவையுள்ளம், எதையும் தாங்கும் இதயம், துயர்துடைக்கும் எண்ணம் எம்பங்கு மக்களின் ஆன்ம, சரீர வளர்ச்சிக்கு உதவுவது மட்டுமல்ல. எமது மழலைகளின் கலை வளர்ச்சியிலேயும் அக்கறை உள்ளவராய்த் திகழ்கின்றார்.

மேலும் எமது ஆலயம் சென்றமாதம் 18ஆம் திகதி ஈரமில்லா நெஞ்சங்களால் ஏவிவிட்ட எறிகணையில் இடிந்துவிட்ட வேளையிலும், எம் மக்களின் ஆழமான விசுவாசம் எல்லாம் இறைசித்தம் என்ற உயரியசிந்தைக்கு அழைத்தது. இதனால் இவர்களது ஒன்றிணைந்த முயற்சியால் மீண்டும் எழில் பொங்கும் ஆலயமாகமிளிருகின்றது. அத்துடன் மாமன்னன் கிறிஸ்துவின் உதய விழா, அமைதி நிலவும் நடுநிசியில் உவகைக்கீதம் முழங்கக் கொண்டாடப்பட்டது. அமைதியின் மன்னனின் அவதரிப்பால், எழுந்த மகிழ்வில் எளிமையான கரோல் நிகழ்ச்சிகளும் அகதிகளாய் அண்டி வந்த அயற்கிராமத்து மக்கள் எம்முடன் மகிழ்வுற, விண்ணொளியாய் மண்ணில் வந்த கிறிஸ்துவின் ஒளிவிழாவும் அனைவரதும் ஒத்துழைப்பால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. புதுமைகள் நிறையும் புத்தாண்டும் புனித பலியுடன் மலர்ந்தது.

செல்வி. M. மேரி இமாக்குலற்

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 7<br>சுடர்: 2 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

## ஐம்பது வினாக்கள்

இங்குள்ள பத்து வினாக்களுக்குரிய விடைகளைத் தேடுங்கள். விடைகளைச் சேர்த்துவையுங்கள். அறிவிக்கும்வரை காத்திருங்கள்.

1. புனித இராயப்பரைச் சித்திரவதைப்படுத்தி சிலுவையில் அறைந்து கொல்லக் கட்டளையிட்ட உரோமபுரி ஆட்சியாளன் யார்?
2. ஒருவர் நோய்வாய்ப்பட்டு இருக்கும்போது அளிக்கப்படும் அருட்சாதனம் எது?
3. ''பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக'' எத்தனையாவது கட்டளையாகும்?
4. இஸ்ராயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு பாலைவனத்தினூடாகச் சீனாமலைக்கு அழைத்துச் சென்ற விடுதலை வீரன் யார்?
5. யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்த அங்கிலிகன் சபை ஆயர் தலைவர் பிரபாகரனை சந்தித்த திகதி எது?
6. அண்மையில் இறைபதம் அடைந்த அருட்திரு ஒப்லோ அடிகளின் பிறப்பிடம், எந்தநாடு?
7. ஞானிகள் மூவர் குழந்தை யேசுவைத் தரிசித்த செய்தியைத் தரும் நற்செய்தியாளர் யார்?
8. அசிசிநகர் எந்நாட்டில் உள்ளது?
9. சர்வதேச நாடுகளாலே பார்வையற்றவர்களின் பாதுகாப்புச் சின்னமாகவும், வழிகாட்டியாகவும் விளங்குவது என அறிவிக்கப்பட்ட கருவி எது?
10. புனித சவேரியாரின் கிறிஸ்தவப் பெயர் என்ன?

கண்மணிகாள்!

அங்கத்துவம் பெற உங்கள் நண்பர்களை ஊக்குவியுங்கள்.

அடுத்த சுடரில் 11 — 20 வினாக்கள் வரும். நன்றி,

உங்கள் அன்பின்
அன்பு விழி

★ ★ ★


# நாடக நாட்டுக்கூத்து பிரதியாக்கப் போட்டிகள்

நடாத்துவோர்: யாழ். திருமறைக் கலாமன்றம்.

**விவிலிய நாடகப் பிரதியாக்கம்:**

1ஆம் பரிசு ரூ. 5000/=
2ஆம் பரிசு ரூ. 3000/=
3ஆம் பரிசு ரூ. 1500/=
ஆறுதல் பரிசாக ரூ. 1000/=

**புனிதர்களின் வரலாறு பற்றிய நாட்டுக் கூத்து பிரதியாக்கம்:**

1ஆம் பரிசு ரூ. 5000/=
2ஆம் பரிசு ரூ. 3000/=
3ஆம் பரிசு ரூ. 1500/=
ஆறுதல் பரிசாக ரூ. 1000/=

போட்டி சம்பந்தமான விபரங்களையும், விதிகளையும் திருமறைக் கலாமன்ற பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

திருமறைக் கலாமன்றம் செயலாளர்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

A 2/93


# திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் சமாதானத் தினச்செய்தி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**4. வறுமை போராட்டத்தின் விளைவு**

அண்மைக்காலத்தில் சாதிகள், இனங்கள் பூர்வகுடியினரிடையே ஏற்படுட்டுள்ள வன்முறைகளாலும், உள்நாட்டுப் போர்களாலும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டதுடன், முன்பு அமைதியாக வாழ்ந்த மக்களிடையே பிளவுகள் உண்டாகி, வேதனைகளும் பகையுணர்ச்சிகளும் மிஞ்சியுள்ளன. வன்முறைகளைக் கையாள்வது, உண்மையில், முன்னிருந்த இறுக்கநிலைகளை மேலும் மோசமாக்கி புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. போரினால் எப்பிரச்சினையும் தீர்க்கப்படுவதில்லை. போரினால் எல்லாவற்றிலும் இடர்பாடுகள் ஏற்படுசின்றது.

போரினால் எண்ணற்ற மரணங்களும், துன்பங்களும், அழிவுகளும் உண்டாவதுடன் மனித உறவுகளும் பாதிக்கப்படுகின்றன. போர் ஏழைகளின் துன்பங்களை அதிகரிக்கிறது. அத்துடன், மக்களின் தொழில் துறைகளையும், வீடுவாசல்களையும் நாசமாக்குவதால் மேலும் பலரை ஏழ்மை நிலைக்கு உள்ளாக்குகிறது. எதிர்காலத்தைப்பற்றிய தமது நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்டதையுணர்ந்த இளைஞர்கள் பொறுப்பற்ற முறையில் வன்முறையில் ஈடுபடுகின்றனர். பெண்கள், குழந்தைகள், நோயாளர், காயமுற்றோர் எல்லாம் இடம்பெயர்ந்து, தம் கையிலுள்ளதைத்தவிர வேறு பொருள்பண்டம் ஏதும் இல்லாதவர்களாய் அகதிகளாகின்றனர். பாதுகாப்போ ஆதரவோ அற்றவர்களாக அவர்கள் பிறநாடுகளில் தஞ்சம் புகுகின்றனர்.

இத்தனை படுகொலைகளின் பின், போர் ஒருபோதும் மனித குலத்துக்கு நன்மை செய்வதில்லை, வன்முறைகளால் அழிவேதவிர ஆக்கம் எதுவுமில்லை, இதனால் ஏற்படும் வடுக்கள் ஆற நீண்டகாலமாகும். போராட்டத்தின் விளைவாக ஏற்கனவே இருக்கும் கொடிய வறுமைநிலை மேலும் மோசமாவதுடன் புதிய வறுமைக் கோலங்களும் தோன்றுகின்றன என்பதை உணர்வது அவசியமாகும். தொடர்பு சாதனங்களின் மூலம் கண்கூடாகக் காட்டப்படும் போரின் கொடூரங்கள் தனிநபர்கள், சமூகங்கள், நாடுகள் — எல்லோருக்குமே ஓர் எச்சரிக்கையாக இருந்து, போரில் மக்களை அழிப்பதற்கும் கொல்வதற்கும் பணம் பயன்படுத்தப் படலாகாது. மனிதனின் மாண்பைக் காக்கவும், அவனது வாழ்வை முன்னேற்றவும், அமைதியான சுதந்திரமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பவும் அது பயன்படுத்தப் படவேண்டும் என்பதை அனைவருக்கும் நினைவூட்ட வேண்டும்.

**5.** அபிவிருத்தியடைந்த நாடுகளில் மக்கள் உலக பொருள்களை தேடுவதிலேயே பைத்தியமாக அலைகிறார்கள். இதனால் ஏழை பணக்காரருக்கிடையிலுள்ள இடைவெளி ஆழமாகிறது. மக்கள் பிறரின் தேவைகளின் மட்டில் குருடராக வாழ்கின்றனர். ஆகவே மக்களின் சமூக, கலாசார, ஆன்மீக, பொருளாதார நலனை மேம்படுத்த வேண்டுமாகில் உலக பொருட்களின் கட்டுப்பாடற்ற பாவனையை மட்டுப்படுத்தி, செயற்கையான தேவைகளை ஏற்படுத்தாதிருக்கவேண்டும். எளிமையும் மட்டுமிதமும் எமது நாளாந்த வாழ்வின் பிரமாணங்களாக இருக்கவேண்டும். உலக சனத்தொகையில் ஒரு சிறிய பகுதியினர் பெருமளவான பொருளை செலவழித்துத் தீர்ப்பதால் கிடைக்கக்கூடிய மூல வளங்களைவிட தேவை அதிகரிக்கின்றது. இத்தேவையைக் குறைப்பதே வறுமையை மட்டுப்படுத்துவதற்கு முதற்படியாகும். அதேவேளையில் உலகத்தின் செல்வங்களை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதற்கும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இது தொடர்பாக நிலையற்ற இவ்வுலகசெல்வங்களைத் தேடவேண்டாமென நற்செய்தி விசுவாசிகளுக்கு ஓர் அழைப்பு விடுகின்றது: ''மண்ணுலகில் செல்வம் சேர்த்துவைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும். திருடரும் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால் விண்ணுலகில் செல்வம் சேர்த்து வையுங்கள் (மத். 6:19—20). இது கிறிஸ்தவ அழைப்பிலே அடங்கியுள்ள ஒரு கடமையாகும்.

நற்செய்தியிற் கூறப்பட்ட வறுமை சமூக–பொருளாதார வறுமையிலிருந்து வேறுபட்டது. பின்னையது பலவந்தத்தினிமித்தம் அனுபவிக்கப்படுவதாகையால் அது கடுமையாகவும் துன்பகரமாகவும் இருக்கின்றது. நற்செய்தியின் வறுமையோ கிறிஸ்துவின் அழைப்புக்கமைய ஒருவர் தாமே தேர்ந்து கொள்வது. ''இவ்வாறே தன் உடைமையெல்லாம் துறக்காவிடில் உங்களுள் எவனும் என் சீடனாயிருக்க முடியாது'' (லூக். 14:33).

நற்செய்தியின் வறுமையின் மூலம் ஒருவர் இறைவனோடும், பிறரோடும், படைப்புக்களோடும் தகுந்ததோர் உறவை ஏற்படுத்தக் கூடுமாதலால் அது சமாதானத்திற்கு வழியாயிருக்கின்றது. இத்தகைய ஒரு நிலையில் தன்னை வைக்கும் ஒருவரின் வாழ்வானது, சகல படைப்புக்களையும் அன்புசெய்யும் இறைவன்மீது மனுக்குலம் முழுமையாகத் தங்கியுள்ளது என்பதற்குச் சான்று பகர்கின்றது. உலக பொருட்கள் எத்தகையவை என்பது, அதாவது அனைவரின் நன்மைக்காகவும் இறைவன் அளித்த கொடை என்பது அப்போது உணரப்படுகின்றது.

''சமாதானம் வேண்டுமெனில் ஏழைகளுக்குக் கரம் நீட்டுங்கள்'' ஏழைகளும் செல்வந்தரும் தாம் சகோதர சகோதரிகள் என்பதை உணர்வார்களாக. அனைவரையும் நேசிக்கின்ற அனைவரது நலனையும் விரும்புகின்ற, அனைவருக்கும் சமாதானம் என்னும் கொடையை வழங்குகின்ற ஒரே இறைவனின் பிள்ளைகளாக தம்மிடம் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வார்களாக!

திருத்தந்தை
2ஆம் அருள் சின்னப்பர்

# செய்திச் சாறு

★ கென்யாவுக்குள் வாழும் 4 லட்சத்திற்கு மேற்பட்ட வெளிநாட்டு அகதிகளை பலவந்தமாக வெளியேற்ற அரசு எடுத்திருக்கும் முடிவை எதிர்க்க உள்ளது ஐ. நா. நிறுவனம்.

★ நிற வெறிக் கொள்கையை முற்றிலும் அகற்றுவதற்கு தென்னாபிரிக்க அரசு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டுவதாக அறிவித்தார் இங்கிலாந்தின் அங்கிலிக்கன் பேராயர் ஜோர்ஜ் காரி.

★ எக்ஸிகோவினாவில் இராணுவத்தினர் பெண்களுக்கெதிரான வன்முறையில் தொடர்ந்து ஈடுபடுவதாக மனித உரிமைக் கழகம் குற்றம் சாட்டியது. பெண்கள் கற்பழிக்கப்படுவதற்கென்றே கடத்திச் செல்லப்படுகிறார்கள் என்று தன் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

★ மெக்சிக்கோவில் இருந்துவந்த குவாட்டமாலா அகதிகளுள் 2480 பேர் தமது சொந்த நாடு திரும்பினர்.

★ கிழக்கு ஐரோப்பாவில் தலத்திருச்சபை அங்கீகாரம் பெற்ற கத்தோலிக்க நாளிதழ் போலந்தில் இவ் வெள்ளிமுதல் பிரசுரத்தைத் தொடக்கியது.

★ ருவாண்டா நாட்டில் இராணுவத்தினரும் அரசின் கையாட்களும் திட்டமிட்ட கொலைகள், கற்பழிப்புகள் போன்ற மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபடுவதாக சர்வதேச மனித உரிமைகள் குழு குற்றம் சாட்டுகின்றது.

★ அல்பேனிய அரசுத்தலைவரின் அழைப்பை ஏற்று அந் நாட்டில் 2ஆம் அருள் சின்னப்பர் திருப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு பத்திரிகை அலுவலகம் அறிவித்துள்ளது.

## கிறிஸ்தவ மதத் தலைவர்களின் அழைப்பு

### "மரண தண்டனையை நிறுத்துங்கள்"

மரணதண்டனை நிறைவேற்றுதல் குற்றங்களைக் குறைப்பதற்குப் பதிலாக மேலும் வன்முறையை பெருக்குகின்றன என்று கூறி இந்நடவடிக்கையை நிறுத்த வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளனர் அமெரிக்க ஐக்கியநாட்டின் பெல்ஜினியா மாநிலத்தின் கிறிஸ்தவ சபைத் தலைவர்கள். பெல்ஜினியா மாநிலத்தில் இவ்வாண்டிற்கான சட்டசபை தொடங்கப்படுவதை அடுத்து கத்தோலிக்க ஆயர் வால்டன் உட்பட மற்றும் கிறிஸ்தவ சபைகள் வெளியிட்ட அறிக்கையில் மரண தண்டனை நிறைவேற்றுதல் மற்றும் வன்முறைக்கு பொது மக்களும் தங்கள் கண்டனத்தைக் தெரிவிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளனர். இதற்கிடையே அம் மாநிலத்தில் 1987 ஆம் ஆண்டு மூன்று பேரைக் கொன்ற குற்றத்திற்காக சாள்ஸ் ராம்பர் என்பவருக்கு அண்மையில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## பர்மாவில் 160 கிராமவாசிகள் தீயிட்டு கொல்லப்பட்டனர்

பர்மாவில் வடகிழக்குப் பகுதியில் கடந்த சில மாதங்களில் 160 கிராமப்புறக் கிறிஸ்தவர்கள் இராணுவத்தினரால் தீயிட்டுக் கொல்லப்பட்டதாக தாய்லாந்தின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் அறிவிக்கின்றன. புரட்சியாளர்களுக்கு உதவி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இக்கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்ட வேளை நோய்க்காவ், தோங்கோவ், தௌகீ என்ற மறையாவட்டங்களிலுள்ள 30,000 பேர் போதிய உணவின்றி அகதிகளாக வாழ்வதாகவும் செய்தி தெரிவிக்கின்றது. குருக்களும், துறவிகளும் தங்கள் பங்குதலத்தில் விசுவாசிகளைச் சந்திப்பதிலிருந்து பர்ம ராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டு வருவதாகவும் பர்மாவில் இருந்து தப்பி வந்து தாய்லாந்தில் வாழும் அகதிகள் கூறினர். இவ் அகதிகளின் கூற்றுப்படி கிறிஸ்தவர்களுக்கெதிரான சித்திரவதைகள் பர்மாவின் வடகிழக்குப் பகுதியில் இடம் பெற்று அவர்கள் புத்தமதத்திற்கு மாற கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள்.

## குருத்துவ நிறைவு தினம்

### "செபிப்போமாக!"

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 4 — | L. செபஸ்ரியன் குருஸ் | (1990) |
| ,, | 6 — | அன்ரன் மத்தாயஸ் | (1973) |
| ,, | 13 — | F. J. ஸ்ரனிஸ்லாஸ் o.m.i. | (1945) |
| ,, | 23 — | S. E. றெஜினோல்ட் o.m.i. | (1992) |
| பெப்ருவரி | 3 — | J. P. E. செல்வராசா | (1958) |
| ,, | — | S. E. N. குணசீலன் | (1958) |
| ,, | 4 — | J. B. தேவராஜா | (1957) |
| ,, | 6 — | F. X. றெஜினோல்ட் | (1991) |
| ,, | 24 — | J. A, ராசகாரியர் | (1941) |

## யாத்திரைத்தலத்தில் மீண்டும் திருப்பலி

நீண்ட காலமாக கைவிடப்பட்டிருந்த கிழக்கு அரியாலை அன்னை வேளாங்கண்ணி யாத்திரைத் தலத்தில் ஒவ்வொரு முதல் சனிக்கிழமைகளிலும் மாலை 4. 30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுமென பங்குத்தந்தை M. ரூபன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

## நூல் வெளி....

( 1.ஆம் பக்கத் தொடர்ச்சி )

இந்நூலின் ஆய்வுரைகள் சமஸ்கிருதத்துறை தலைவர் பேராசிரியர் V. சிவசாமி அவர்களாலும், யாழ் மறைவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி S. J. இம்மானுவேல் அடிகளாராலும் வழங்கப்பட்டன.

எல்லா சமயத்தினரும், சர்வதேச சமூகத்தினரும் உன்னிப் பார்க்கவேண்டிய மக்களின் நலன், கல்வி, சமூக மேம்பாடு முதலியவற்றிற்காக யாழ்ப் பாணத்துக் கத்தோலிக்க திருச்சபை 1875 — 1925 ஆண்டுகளில் ஆற்றிய பணிகளை வரலாற்றுக் கண்ணோட்டத்தில், கூரிய ஆய்வுத்திறனுடனும், நேரிய விமர்சன ஆற்றலுடனும், நூல் ஆசிரியர், கலாநிதி அன்ரன் மத்தாயஸ் அடிகளார் பல்வேறு கோணங்களிலிருந்து வெகு விமரிசையாகக் கையாண்டதை இவர்கள் பாரட்டினார்கள்.

மேலும், சுவாமி ஞானப்பிரகாசர் பணி பற்றிய இச் சிறப்பு ஆய்வில், யாழ். சரித்திர சூழ்நிலையில் கத்தோலிக்க திருச்சபையின் பிறப்பையும், வளர்ச்சியையும், சமூக, சமய, அரசியல் எனும் முக்கோணத்திலிருந்து ஓர் புதுக் கிறிஸ்துவம் பிறப்பதையும் நூல் ஆசிரியர் காட்டுவதைப் பாராட்டினார் அருட்கலாநிதி இம்மானுவேல். பழமையை ஆய்வுக்கு உட்படுத்தி, அதன் உள்நோக்குகளை எதிர்காலத்திற்குப் பயனான திசைகாட்டிகளாகக் கொடுத்து, ஓர் நிகழ்கால ஆய்வின் கடமையைப் பூர்த்தி செய்த நூல் ஆசிரியரின் செயல் திறனையும் மேலும் பாராட்டினார்.

அருட்கலாநிதி அன்ரன் மத்தாயஸ் உரையாற்றுகையில், தனது வாழ்க்கைப்பயணத்தில் சந்தித்த பல அன்பு உள்ளங்களில் கண்ட இறைவன் அருளும், அவர்களின் ஆசீரும் இந்நூல் வெளியாவதற்குக் காரணம் என்றுகூறி, பெருந்திரளாய் கூடியிருந்த சகலருக்கும் தன் நன்றியைத் தெரிவித்தார்.

செல்வி P. வசந்தா நன்றியுரைகூற, செல்வி விக்னேஸ்வரி சரவணமுத்து தயாரித்த "பத்துக் கன்னியர் உவமை" எனும் நாட்டிய நாடகத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

## மாசி 11 முதலா ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏறக்குறைய இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிக்கும் ஒரு போரின் மத்தியித் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மவர்க்கு இந்த நோயாளர் தினம் ஒரு புதிய வடிவத்தையும்,முக்கியத்துவத்தையும் பெறுகின்றது. வறுமையாலும், போஷாக்கின்மையாலும், விமானக் குண்டு வீச்சுகள். எறிகணைத் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள் என்பவற்றுக்கு ஆளாகி எம்மக்களில் கணிசமானோர் உடலிலும் உள்ளத்திலும் தாங்கொணா வேதனைகளை அநுபவித்து வருகின்றார்கள், திடீர் நோயாளிகளாக மாறியிருக்கின்றார்கள்.

எனவே எமது மறைபணியில் உடல்,உளரீதியாகத் துன்புறும் எமது உடன் பிறப்புக்களின் தேவைகளை உணர்ந்து அவர்களின் குணமாக்கலை அனுபவிக்கக் கூடியவிதத்தில் எமது பணிகளை வடிவமைக்க வேண்டிய பாரிய பொறுப்பு கிறீஸ்தவர்களாகிய எம்மைச் சார்ந்ததாகும்.

மற்றவர்க்கு எடுத்துரைக்க முடியாத வேதனையைத் தாங்கியுள்ள எமது சமூகத்தின் இத் தேவையை நாம் இனியும் புறக்கணிக்காது உடனடியாகச் செயற்பட வேண்டியது அத்தியர்வசியம் ஆகின்றது.

அதேவேளையில், எமது மக்கள் மீது தாங்கொணா பளுக்களையும் வேதனைகளையும் பிரிவுகளையும் சுமத்தி வருகின்ற இந்தக் கொடியபோரை விரைவிலே ஒரு முடிவுக்கு கொண்டுவர ஒன்றுபட்டு உழைக்க முன்வருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

ச. எ. றெஜினோல்ட் அ. ம. தி,
யாழ். வைத்தியசாலை ஆன்மகுரு

## இளவாலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

● ஆலயங்கள், வீடுகள் பெரும்பாலும் வானம் பார்த்த நிலையும், சொத்துக்கள் அனைத்தும் சிதறிய வடிவும் தான்.
● 42 பாடசாலை பிள்ளைகள் தகுந்த கல்வி போதனையின்றி அவதியும், கஸ்டமும் அடைகின்றார்கள். இரவு வேளைகளில் வீடுகளில் தங்கமுடியாது, மூகாமிற்குள் அனைவரும் முடங்கி விடவேண்டும். அங்குள்ள அனைவரும் தங்களை அங்கிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றார்கள்.

அங்கே அருட் தந்தையர் யேசுதாஸ், பீற்றர் மற்றும் கன்னியர்கள் மக்களோடு மக்களாக வாழ்கின்றார்கள். யேசுதாஸ் சுவாமியார் பாடசாலையில் மக்களது தேவைகளை கேட்டறிந்து தெரிவிப்பதிலும், பீற்றர் சுவாமியாரும் கன்னியரும் சமூக சேவையில் ஈடுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## உரையாட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிப்பு வாரம் சிறப்பிக்கப் படுகின்றது. கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு ஆவியின் கனிகளைக் கொண்டிருங்கள் என்பது இவ்வாண்டிற்கான தலைப்பாகக் கொண்டுள்ளது.

## தென்னிலங்கை...

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

தில் இளம் பெண்களுக்கான சமூகப்பணி மையம் கட்டுவதற்கு அதிகாரிகள் அனுமதியளித்திருந்த போதிலும் அப்பகுதியின் புத்த மதத் துறவிகளின் செல்வாக்கால் கட்டிடப்பணியும் காவற்துறையால் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

## மரியாயின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும், அதனால் உண்டாகும் பலனையும் எடுத்து விளக்கினார். யாழ் தலத்திருச்சபையின் மறுமலர்ச்சியின் உயிர் நாடியாக, புளிக்காரம் போல் மரியாயின் சேனையின் அப்போஸ்தலத்துவம் விளங்க வேண்டுமென்றும், ஆகவே பிரசீடியங்களின் அங்கத்துவத்தை ஆண்மைப் படுத்துவது மட்டுமல்ல, சிறப்பாக அதன் சிந்தனை, செயல் பாடுகளை இளமைப் படுத்துவதின் தேவையையும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

செயல் திறன் மிக்க அப்போஸ்தலிக்க இயக்கங்களில் ஒன்றாகிய சேனையின் தனித்துவத்தையும், அதன் வளர்ச்சியின் அவசியத்தையும் கொமிற்சிய ஆன்ம இயக்குநர் தன் உரையில் குறிப்பிட்டார். கலை நிகழ்ச்சிகளுடன் விழா நிறைவெய்தியது.


## தும்பளை புனித லூர்து அன்னை யாத்திரைத்தல திருவிழா

### மாசி 2, 1993—மாசி 11, 1993

தினமும் மாலை 4.30 மணிக்கு செபமாலையுடன் நவநாள் திருவழிபாடு ஆரம்பமாகும். 10-02-93 மாலை ஆராதனை 5 மணிக்கும் 11 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப் படும் என்பதை அறிவிக்கின்றோம்.

A/3/93 பரிபாலகர்கள்


இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81